செய்தி வெளியீடு எண்: 473 நாள் : 05.09.2013

# செய்தி வெளியீடு

நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள்துறை அமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் நெடுஞ்சாலைத்துறையின் மூலம் கட்டப்பட்டுவரும் பாலங்களை அதிகாரிகளுடன் இன்று (5.9.2013) ஆய்வு மேற்கொண்டார். சென்னை முகப்பேரில் கூவம் ஆற்றின் குறுக்கே ரூ.16.04 கோடி செலவில் கட்டிமுடிக்கப்பட்டுள்ள ஆற்று பாலம், திருமங்கலம் சந்திப்பில் ரூ.60.23 கோடி செலவில் கட்டுப்பட்டுவரும் சாலை மேம்பாலம், பட்டரவாக்கம் இரயில் நிலையம் அருகில் இரயில்வே கடவு எண்.5க்கு மாற்றாக ரூ. 35.00 கோடி செலவில் கட்டுப்பட்டுவரும் இரயில்வே மேம்பாலம், ஈ.வெ.ரா சாலை அமைந்தகரை அருகில் அண்ணா வளைவு சந்திப்பில் ரூ.117.00 கோடி செலவில் கட்டுப்பட்டுவரும் பல்லடுக்கு மேம்பாலம் மற்றும் வடபழனியில் ஆற்காடு சாலை சந்திப்பில் ரூ. 69.40 கோடி செலவில் கட்டப்படவுள்ள பல்லடுக்கு மேம்பாலத்திற்கான ஆரம்பகட்ட பணிகள் நடைபெறுவதையும் நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு சைதை துரைசாமி, தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கள், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறையின் முதன்மைச் செயலாளர், தலைமைப் பொறியாளர்கள் மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தனர். நடைபெற்றுவரும் பணிகளை சிறந்த முறையில் விரைந்து முடிக்க ஒப்பந்தாரர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்திரவிட்டார்.

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9